கடைவரம்புப் பகுதி விவசாயிகளுக்கு முதலிலே தண்ணீர் கொடுத்துவிட்டு அதற்குப் பின்னால் படிப்படியாக மற்ற பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்போது கடைசியில் இருப்பவர்களுக்கு முதலிலே பாசன வசதி அளிப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, மங்களங்காடு அருகே நசுவினி ஆற்றில் அணை.

472—(*வினா எண். 8324)— **திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மங்களங்காடு அருகே நசுவினி ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டை தொகுதியில் நசுவினி ஆற்றின் குறுக்கே சிறப்புத் திட்டமாக அணைக்கட்டும் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 14—4—1987 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

திரு. பி. என். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 14-4-1987 அன்று தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அணைக்கட்டு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். பட்டுக்கோட்டை தொகுதி மக்கள் சார்பில் முதற்கண் நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அணையைக் கட்டும்போது சப்ளை வாய்க்கால் இல்லாத பகுதிகளுக்கு சப்ளை வாய்க்கால் அமைக்க சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சில நேரங்களில் நிலம் கொடுக்க அவர்கள் மறுப்பதால் பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, நெடுஞ்சாலைத் துறை, மற்ற துறைகளுக்குத் தேவையான நிலத்தை எடுப்பதற்கு எப்படி நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறதோ அதைப்போன்று இந்த சப்ளை வாய்க்கால்கள் அமைக்கவும் நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டத் துறையுடன் கலந்து முடிவு செய்யப்படும்.